**செய்திவெளியீடு எண்.35/2016** **நாள் 11.07.2016**

# சென்னைக் குடிநீர் வாரியம் இந்த காலாண்டு ரூபாய் 17.7 கோடி அதிகமாக வசூல் செய்தது.

---

2016–17 ஆம் நிதியாண்டின் முதல் காலாண்டில் சென்னைக் குடிநீர் வாரியம் வரி மற்றும் கட்டணமாக ரூபாய் **92.77** கோடி வசூல் செய்துள்ளது. இது கடந்தாண்டு முதல் காலாண்டில் வசூலிக்கப்பட்ட தொகையான ரூபாய் 75.07 கோடியை விட ரூபாய் 17.7 கோடி கூடுதலாகும். அதாவது 24 சதவிகிதம் கூடுதல்.

நடப்பு நிதியாண்டின் துவக்கம் முதலே வசூல் செய்வதற்கு எடுக்கப்பட்ட தீவிர செயல்பாட்டினால் இந்த இலக்கு எட்டப்பட்டுள்ளது. வசூல் செய்வதற்கான இத்தகைய தீவிர செயல்பாடுகள் 2016–17 ம் ஆண்டின் இரண்டாம் காலாண்டிலும் (ஜுலை முதல் செப்டம்பர் வரை) தொடர்ந்து செயல்படுத்தப்படும். வாரியம் தனது சிறந்த சேவைகளை தொடரவும், மேல் வரி, இணைப்பை துண்டித்தல், ஜப்தி முதலிய நடவடிக்கைகளை தவிர்த்திட ஏதுவாகவும் வரி செலுத்துவோர் மற்றும் நுகர்வோர் தங்களின் நிலுவைத்தொகையை உடனடியாக செலுத்துமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறார்கள்.

மக்கள் தொடர்பு மேலாளர்
சென்னைக் குடிநீர்